# நீண்ட கால பிரதமர் யார் நேருவா? மோடியா?

கடந்த ஜூன் 11 ஆம் தேதி நாளேடுகள் நீண்ட கால பிரதமராகச் சாதனைப் படைத்தார் மோடி என்று செய்திகளை வெளியிட்டு இருக்கின்றன. இதைப் பற்றி காங்கிரஸ் தலைவர்கள் பளிச்சென்று எந்தவித பதிலையும் சொல்லவில்லை. ஒரு தலைவர் பதில் சொல்லி இருக்கிறார், நாளேடுகளில் வந்து இருக்கிறது, படித்தால் நமக்கு ஒன்றும் புரியவில்லை.

நம் மோடி கிருஷ்ண பரமாத்மா போல அலங்காரப் பிரியர். பகவானைப் போலவே இவர் எப்போதும் கழுத்தில் வைஜயந்தி மாலையைக் கூட அணிவித்துப் பார்க்கலாம். மிகுந்த அழகாய் இருக்கும். அழகுக்கு அழகு செய்தது போல் இருக்கும். சுதந்திரதினத் தலைப்பாகை ஆண்டுக்கொன்றாய் சேவல் கொண்டையைப் போல மோடி அணிந்து ஷாஜஹான் கட்டிய செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வருகிறார்.

இப்படிப் பல சாதனைகளைப் புரிந்து கொண்டு பிரதமராக 4399 நாள்களை நிறைவு செய்துவிட்டாராம். இதில் இவர் நேருவை விஞ்சிவிட்டாராம். மோடிக்கு எதைச் செய்தாலும் சொன்னாலும் நேருவை நினைத்து கொள்வார். அவர் மீது ஒரு காய்ச்சல்; மன நோயாளியைப் போல எதையாவது அவரைச் சொல்லிக் கொண்டிருப்பது மோடி வகையறாக்களுக்குப் பழக்கம்.

நமக்கு நேரு மீது பரிவு உண்டு. விடுதலைப் போராட்டத்தில் 12 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருந்தவர். உலக வரலாற்றை மிக எளிமையாக எழுதியவர். உலகப் பேச்சாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர். அணிசேரா நாடுகளின் தலைவராக வலம் வந்தவர். பகுத்தறிவாதி. புத்தர் காலத்தைப் புனித தென்றல் வீசிய காலமென்று வர்ணித்தவர்.


மோடிக்கு இப்படியெல்லாம் புகழ் இருக்க வேண்டும் என்று நாம் சொல்லவில்லை. அவர் உண்மை தொண்டின் அடிப்படையில் பிரதமராக ஆகலாம். அப்படிப்பட்ட அவரின் உண்மை தொண்டுகளை அவர் நம்பும்படி சொன்னதில்லை. தேநீர் விற்றவர் என்றார். மண் சுவர் வீட்டில் குடியிருந்தோம் என்றார். என் தாயார் பாத்திரம் தேய்த்து, கழுவி எங்களைக் காப்பாற்றினார் என்றார். தில்லிப் பல்கலைக் கழகப் பட்டதாரி என்று சொல்லிக் கொண்டார். அப்படி இல்லை என்றும் செய்திகள் வருகின்றன.

**நேருவுக்கும் மோடிக்கும் உள்ள அடிப்படை இதுவாக இருக்கிறது. மோடி விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடாதவர். சிறை செல்லாதவர். வரலாற்றை நேர்மையாக எடுத்துரைக்கத் தெரியாதவர். ஜனநாயகத்தால் குஜராத் முதல்ராகி பிறகு ஆர்.எஸ்.எஸ். மெச்ச பிரதமராகிப் போனவர். அதற்காக எல்.கே. அத்வானியைக் 'காவு' கொடுத்தவர்.**

இந்திய நாட்டின் தேசியக் கட்சிகளின் அரசியல் இயலாமையால் மூன்றாவது முறையாக பிரதமராகி விட்டவர். இந்திய வாக்காளர்களில் 31 சதவிகிதத்தினர் தான் இவருக்கு வாக்களித்தனர். 69 சதவிகிதத்தினர் இவருக்கு வாக்களிக்கவில்லை. இது விகிதாச்சார பிரதிநிதித்துவம் அடிப்படையில் நாம் பார்க்கும் கணக்கு.

ஆனால் இந்திய ஜனநாயக முறை மக்களவை உறுப்பினர்களின் பெரும்பான்மை பெற்ற கட்சியே ஆளும் கட்சியாகிறது. அப்படி மூன்றாவது முறையும் மோடி ஆட்சிக்கு வந்தது. இவரும் பிரதமர் ஆனார். ஆனால் 240 இடங்களே இவர் பெற்றார். மைனாரிட்டி கட்சி மோடி கட்சி நாயுடுவும் நித்திஷ்குமாரும் துணை நின்றனர். மோடி 'ஸ்திரமான' பிரதமர் ஆனார்.

**ஐந்து மாநிலத் தேர்தல்கள் வந்தது. மேற்கு வங்காளத்தில் மம்தா கட்சியைத் 'துவம்சம்' செய்தார். கழுகு வட்டமடிப்பது போல் எம்பிக்களை அதிகமாக்கி கொண்டார். இன்று மோடி கட்சியின் ஆதரவு எண்ணிக்கை 313 என்று உயர்ந்துள்ளதாக செய்திகள் வருகின்றன. தேர்தல் முடிவுகள் அறிவித்தது 240. மோடியாக உயர்த்திக் கொண்டது 73. ஆக 313. இப்போது ஆல்ப்ஸ் மலை உச்சியில் அவர் கொடி பறக்கிறது.**







இந்த நிலையில் நீண்ட கால பிரதமர் என்று தன்னை அறிவித்து கொள்ள வேண்டும் என்ற ஆசை மோடிக்கு எழுகிறது. உடனே நேரு மோடியின் நினைவுக்கு வருகிறார். நேருவை விஞ்சியவராகத் தன்னைக் காட்டிக் கொள்ள வேண்டும். மேலே நாம் நேருவைப் பற்றி கூறிய தகவல்கள் இவரிடம் எதுவும் இல்லை. அதை அவரும் அறிவார். இருப்பினும் நேருவைவிட விஞ்சியாராகத் தன்னை காட்ட வேண்டும் என்ற எண்ணம் மோடிக்கு எழுகிறது.

**க.திருநாவுக்கரசு**
**திராவிட இயக்க ஆய்வாளர்**



யார் நீண்ட காலம் பிரதமராக இருந்தது? இதைப் பற்றிய ஆய்வில் இறங்கி மோடி அணியினர் ஒரு புதுக ணக்கைத் தருகிறார்கள். நம்மைப் பார்த்து காமராசர் எவ்வளவு காலம் முதல்வராக இருந்தார் என்று கேட்டால் 9 ஆண்டுகள் என்று சொல்வோம். கலைஞர் எவ்வளவு காலம் முதல்வராக இருந்தார் என்று கேட்டால் 19 ஆண்டுகள் இருந்தார் என்போம். எம்.ஜி.ஆர். எவ்வளவு காலம் முதல்வராக இருந்தார் என்று கேட்டால் 10 ஆண்டுகள் என்போம். காமராசர் 3 முறை, கலைஞர் 5 முறை, எம்.ஜி.ஆர். மூன்று முறை என முதல்வராக இருந்தபோது ஆடசியில் இருந்த காலத்தைத்தான் மேலே நாம் கூறி இருக்கின்றோம். இப்படித்தான் ஆட்சிக் காலத்தைக் கணக்கிட்டுச் சொல்வார்கள்.

பிரதமர் நேரு இந்தியாவின் முதல் பிரதமராக இருந்தவர். 1947 ஆகஸ்டு 15 முதல் 1964 மே 27 வரை நேரு இந்தியாவின் பிரதமராக இருந்தார். 16 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து பிரதமராக இருந்தார். இடைக்கால அரசுக்கும் நேரு பிரதமர். 1952 தேர்த லுக்குப் பிறகு 1964 மே27 வரையும் பிரதமராக தொடர்ந்து இருந்தார். தேர்தலுக்குப் பிறகு நேரு பதவியில் இருந்த நாள்கள் 4398 இதை மோடி அரசு கணக்கிட்டு இருக்கிறது.

இப்போதைய பிரதமர் மோடி ஜூன் 10 ஆம் தேதியோடு 4399 நாள்கள் அவர் பதவிக்கு வந்து ஆகிவிட்டதாம். ஆகவே பிரதமர் நேருவை மோடி 1 நாள் அதிகமாகப் பணியாற்றி விஞ்சி விட்டார், சாதனைப் படைத்துவிட்டார் என்கிறார்கள். ஏடுகளில் பெரிதாகச் செய்திகள் வெளியாகின்றன.

**1947லிருந்து 1964 வரை நேரு பிரதமராக இருந்த 16 ஆண்டுகளை மோடி கணக்கில் எடுத்துக் கொள்ள மாட்டாராம். தேர்தல் மூலம் பிரதமராக மோடி தொடர்ச்சியாக 12 ஆண்டுகள் இருக்கிறாராம். ஆகவே மோடி நேருவை விஞ்சிவிட்டாராம் இது மோடி வகையறாக்களின் புது கணக்கு.**

இன்னொரு செய்தி, இந்திரா காந்தி பிரதமராக15 ஆண்டுகளுக்கு மேல் பதவி வகித்துள்ளார். அதையும் மோடி கணக்கில் எடுத்துக் கொள்ளமாட்டார். ஏனென்றால் இந்திரா அம்மையார் தொடர்ச்சியாகப் பதவியில் இல்லை. ஆகவே 15ஐ விட 12 ஆண்டுகளே சாதனை ஆண்டுகள் என்று கணக்கிடப்படுகின்றன. மோடி நேருவைவிட விஞ்சிவிட்டார் என்று கணக்கு காட்ட 'தேர்தல்' சாக்கு. பிரதமர் பதவி வகித்த ஆண்டுகளைக் கணக்கிடுவது இல்லை. அதுவும் ஒரு நாள் மோடி அதிகமாகப் பணியாற்றி நேருவை விஞ்சிவிட்டார். ஆக, நேருவின் 16 ஆண்டுகளும் இந்திராகாந்தியின் 15 ஆண்டுகளும் மோடியின் 12 ஆண்டுகளைவிட சிறியவை. இன்றைக்கு இந்த வகையில் நீண்ட கால பிரதமர் சாதனையைப் பெற்றவர் மோடி என்று உரத்தக் குரலில் கூவுங்கள். இல்லையெனில் நாட்டு மக்களை மோடி சிறையில் அடைத்துவிடக் கூடும்.

இதற்கு உலகத் தலைவர்களும், அமைச்சரவை சகாக்களும், கூட்டணிக் கட்சியினரும் மோடிக்கு வாழ்த்தும் பாராட்டும் தெரிவித்து இருக்கின்றனர். ஏற்கெனவே பிரதமர் மோடிக்கு அவர் செல்லும் நாடுகளிலெல்லாம் விருதுகள் வழங்குகிறார்கள். இப்போதோ ஏற்கனவே பதவியில் இருந்த பிரதமர்களைத் தனது 'மனோ ரதத்தால்' மோடி வெற்றி பெற்றுவிட்டார். ஆனால் இப்படி ஒரு புதுக் கணக்கைத் தயாரித்து புகழ் அடைந்து மோடி என்ன செய்ய போகிறார்? இப்படி ஒரு அற்ப சுகத்திற்காக மோடி மன அவஸ்தைப் பட்டு இருக்கிறார். அவருக்கு நமது அனுதாபத்தை தெரிவிக்கிறோம்.

ஒருவன் உப்பால் பொம்மை செய்து கடலில் போட்டது போல் இந்தப் புகழ் இருக்குமே தவிர வேறொன்றுமில்லை. இதில் உண்மை இல்லை என்று நாட்டு மக்கள் நகைக்கிறார்கள்.

இதனைச் சில நாளேடுகள் மோடியின் மைல்கல் என்று இந்தப் போலியான நீண்ட கால பிரதமர் கொண்டாட்டத்தை எழுதுகின்றன. தி வையர் (The Wire) நிறுவன ஆசிரியர் சித்தார்த் வரதராசன் பின் வருமாறு கூறுகிறார்.

**"மோடி ஒரு போலியான மைல்கல்லை கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில் சிவிலியன் (பொது மக்களின்) கப்பல் மீது அமெரிக்கா நடத்திய இராணுவத் தாக்குதலில் மூன்று இந்திய மாலுமிகள் கொல்லப் பட்டுள்ளனர். அமெரிக்கா தனது சொந்தத் தீர்மானத்தின் படி செயல்படுவதும் ஒன்றிய அரசு அதைத் தீர்க்கமாகத் தட்டிக் கேட்கத் தயங்குவதும் தான் உண்மையான நிலை"**

**இந்த மாலுமி கொலைகளைக் கண்டிப்பதை விட்டு விட்டு நீண்ட கால பிரதமர் யார் என்று மோடி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார். இது தேவையான ஆராய்ச்சி தானா? அதில் ஏதாவது உண்மையிருக்கிறதா? என்று நாம் கேட்க விரும்புகிறோம்.**

சைவ சமயக்குரவர் நால்வருள் ஒருவர் மாணிக்க வாசகர். அவர் திருவாசகம் எனும் நூலை எழுதி இருக்கிறார். அதில் 'அச்சப்பத்து' என்றொரு பாடல் பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியின் முதல்பாட்டு,

"புற்றில் வாள் அரவும் அஞ்சேன்
**பொய்யர் தம் மெய்யும் அஞ்சேன்**
கற்றைவார் சடை எம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றும் ஓர் தெய்வம் தன்னை
உண்டு என நினைந்து எம் பெம்மான்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே"

என்று இருக்கும். இரண்டாவது அடியில் வரும் **'பொய்யர் தம் மெய்'** எது என்று இதுவரை நமக்குத் தெரியாது. மணிவாசகர் எப்படிப்பட்டவரை நினைந்து எழுதி இருக்கிறார். அதுவும் நமக்குத் தெரியாது. இதற்கு விளக்கம் எழுதிய சித்பவானந்தர் கூட விரிவாகச் சொல்லவில்லையே இதற்கு என்னதான் முழுப்பொருள்? என்று நாம் தவித்தோம். அந்தப் **'பொய்யர் தம்மெய்'** எப்படி இருக்கும் என்பதை இதோ மோடி சொல்லி விட்டார். இப்போது நமக்குப் புரிந்துவிட்டது. 16,15 ஆகிய எண்களை விட 12 மிகப் பெரியது. மோடி ஒரு நாள் அதிகமாகப் பணியாற்றி நேருவை விஞ்சியதற்கு அவர்கள் எடுத்துக் கூறியதை ஆரிய பட்டர் 'O' ஐ கண்டுபிடித்தற்குச் சமம். இது தான் **'பொய்யர் தம் மெய்'** புரிந்து கொள்ளுங்கள்.

●



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு உறையூர் 23 வது வார்டு முன்னாள் கவுன்சிலர் கஸ்தூரி ரங்கன் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அன்னதானம் வழங்கினார். அருகில் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன் மற்றும் கழக நிர்வாகிகள் குடமுருட்டி சேகர் , ஏ.எஸ்.மணி, நாகலட்சுமி கமல் முஸ்தபா கிராப்பட்டி செல்வம் , பகலவன் கருப்பையா ஜெயராம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### திருவாரூர் கலைஞர் கோட்டத்தில்

## 1000 இளைஞர்கள் பங்கேற்ற Gen Z அரசியல் கருத்துப்பரிமாற்ற நிகழ்ச்சி!

### அடுத்தக்கட்ட பணிகள் குறித்து ஆய்வு!

திருவாரூர், ஜூன் 16 - மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகழ்பாடும் திருவாரூரின் அடையாளங்களில் ஒன் றான காட்டூர் கலைஞர் கோட்டத்தில் திருவாரூர், நாகப்பட்டிணம் , மைலாடு துறை மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்கள் கூடிய GEN Z எனும் இளை ஞர் திருவிழா நடை பெற்றது.

வெற்றியில் மட்டுமே கூடிக்களிக்கும் தமிழ் நாட்டு அரசியல் இயக்கங்களின் மத்தியில், ஆட்சிப் பொருப்பில் இருந்தாலும் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தாலும் இரண்டையுமே மக்கள் பணிக்காக செலவிடும் ஒரே இயக்கமாக திராவிட முன்னேற்றக்கழகம் விளங்குகிறது.

"தண்டவாளத்தில் தலை வைத்துப்படு என்றாலும், ஆட்சிப்பொருப்பை ஏற்றிடு என்றாலும் இரண்டையும் ஒன்றாக கருதுபவன் என்தம்பி கருணாநிதி" என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப்பட்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகழ்பாடும் கலைஞர் கோட்டத்தில் ஆண்களும் பெண்களும் என இளை ஞர்கள் தன்னெழுச்சியாய் திரண்ட அரசியல் கருத்துப் பரிமாற்ற கருத்தரங்கம் நடைபெற்றது.

திருவாரூர், நாகப்பட்டிணம், மைலாடுதுறை மாவட்டங்களில் இருந்து ஆண்கள் பெண்கள் என ஆயிரம் இளைஞர்கள் தன்னெழுச்சியாய் திரண்ட இந்த நிகழ்வு திமுகவின் ஐம்பெரும் முழக்கங்களுடன் தொடங்கி , திராவிட இயக்க வரலாறுகள், கழக கோட்பாடுகள், கழக அரசின் சாதனைகள், மக்களிடம் இன்னும் கொண்டு சேர்க்க வேண்டிய தகவல்கள், போலி அரசியல்வாதிகள் வேடமிட்டு மக்களை ஏமாற்றி அரசியல் நடத்துபவர்களின் முகமூடிகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்து மீண்டும் திராவிட மாடல் நாயக்கர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் கழக அரசு மீண்டும் தொடர்வதற்கான அடுத்தகட்ட பணிகள் ஆகியவைகள் குறித்து விவாதிக்கப்பட்டன.

இந்த GEN Z கருத்தரங்கம் இளைஞர்களின் அடுத்தக் கட்ட அரசியல் பணிகளுக்கான ஒரு களமாகவும், ஒவ்வொரு இளைஞரும், இளம்பெண்களும் தங்களுக்குள் இயக்கப் பணிகளுக்கான சக்திகளை தங்களுக்குள் நிரப்பிக் கொள்ளும் கூடலாகவும் அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### பி.டி.சி. வெ.பாலுவின் சம்பந்தி – பேரணாம்பட்டு

## முன்னாள் எம்.எல்.ஏ., சின்னசாமி மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!

வேலூர், ஜூன் 16 - சென்னை மாநகராட்சி முன்னாள் துணை மேயர் பா.ஜெயசந்திர வதனா, மாநில தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.டி.சி. வெ.பாலு ஆகியோரின் சம்பந்தியும், வேலூர் மாவட்டம், பேரணாம் பட்டு சட்டமன்ற தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சின்னசாமி (வயது 73) அவர்கள், சில காலம் நோய் வாய்ப்பட்டிருந்த நிலையில், ஆம்பூரில் உள்ள அவரது வீட்டில் நேற்று முன்தினம் (14.6.2026- ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது இறுதி ஊர் வலம் நேற்று ஆம்பூரில் நடைபெற்றது. அன்னாருக்கு 3 மகள்களும், ஒரு மகனும் உள்ளனர். அவரது துணைவியார் ஏற்கனவே மறைவெய்தி விட்டார்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.